**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 434/2016</u>**

நாள் 13.10.2025

DW2 – ராமசாமி

த/பெ – ஆறுமுகம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of October 2025)**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது மாமனார் பெயர் முதலிகருப்பன் ஆகும். முதலிகருப்பன் எனது தாய்மாமன் ஆவார். முதலிகருப்பனின் தாத்தா பெயர் அம்மாசை வலையன் ஆகும். அந்த அம்மாசை வலையனுக்கு பாட்டா வலையன், ரங்க வலையன் ஆகிய இருவரும் வாரிசுகள் என்றால் சரிதான். அம்மாசை வலையன் மணியக்காரராக இருந்தார் என்றால் சரிதான். அதனால், அந்த அம்மாசை வலையனுக்கு அரசாங்கத்தால் 3.89 ஏக்கர் இனாமாக வழுங்கப்பட்டது என்றால் 1 ஏக்கர் மட்டும் தான் இனாமாக கொடுத்தார்கள். அந்த சொத்துக்களின் சர்வே எண். எனக்கு தெரியாது. நான் சொல்வது பொய் என்றும் அம்மாசை வலையன் மணியக்காரராக வேலை பார்த்ததால் அவருக்கு 3.89 ஏக்கர் சொத்து அரசால் இனாமாக கொடுக்கப்பட்டது என்றும், அந்த விபரம் எனக்கு தெரிந்திருந்தும் 1 ஏக்கர் மட்டும் தான் இனாமாக கொடுக்கப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. கந்தம்பாளையத்தை சேர்ந்த பெரிய தன்னாச்சி என்பவர் இருந்தால் என்றால் சரிதான். முதலிகருப்பன், பாட்டா வலையன் மகன் சிந்த கருப்பன், சிவன் ஆகிய மூவர் மீதும் கொலை வழக்கு நடந்தது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. அந்த சிவன் என்பவர் தான் இந்த வழக்கின்

2–ம் பிரதிவாதி கருப்புசாமி என்றால் இல்லை. அவர்கள் வெவ்வேறு நபர்கள் ஆவார்கள். அந்த கருப்புசாமி தான் எனது மச்சனன் ஆவார். முதலி கருப்பன் மகன் சிவன் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த முதலி கருப்பனுக்கு 2–ம் பிரதிவாதி கருப்புசாமி தான் மகன் ஆவார். 2–ம் பிரதிவாதி கருப்புசாமி தான் மேற்படி கொலை வழக்கில் 3–ம் எதிரி சிவன் என்ற நபராக ஆஜராகி வழக்காடி வந்து 1 வருட காலம் தண்டனை பெற்றார் என்றால் இல்லை. அந்த கொலை வழக்கில் முதலி கருப்பன் மற்றும் சிந்த கருப்பன் ஆகிய இருவருக்கும் தலா 3 ஆண்டு தண்டனை வழங்கப்பட்டது. அந்த வழக்கில் முதலிகருப்பன் மகன் சிவன் என்பவருக்கு 1 ஆண்டு தண்டனை வழங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கொலை வழக்கிற்கு முன்பாகவே 2–ம் பிரதிவாதி கருப்புசாமி இரும்பொறை கிராமம், கூத்தாம்மாண்டி கிராமத்தில் இருந்து வந்தார்.

3. எனது பெரிய மச்சனன் முத்துச்சாமிக்கு 4 பெண் பிள்ளைகள், 1 ஆண் மகன் வாரிசுகள் ஆவார்கள். அந்த முத்துச்சாமிக்கு பழனியம்மாள் முதல் மனைவி என்றும், அவர் மூலம் தவமணி, மல்லிகா, சாவித்திரி ஆகியோர் பிறந்தரர்கள் என்றும், 2–வது மனைவி கருப்பாத்தாள் மூலம் கவிதா, வெள்ளியங்கிரி ஆகியோர்கள் பிறந்தார்கள் என்றால் சரிதான். முத்துச்சாமி மேட்டுப்பாளையம் வெல்ஸ்புரத்தில் குடியிருந்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது மாமனார் முதலி கருப்பனுக்கு வெல்ஸ்புரத்தில் 5–1/4 ஏக்கர் பூமி உள்ளது. அந்த பூமிக்கு நான் சென்றுள்ளேன். சுமார் 6 மாதத்திற்கு ஒரு முறை சென்று வருவேன். அந்த பூமியை எப்போது வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தை எனது மாமனாரும், மாமியாரும் சேர்ந்து வாங்கியதாக என்னிடம்

சொன்னார்கள். அதனால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த 5–1/4 ஏக்கர் பூமியில் தான் எனது பெரிய மைத்துனர் முத்துச்சாமி இருந்தார் என்றால் இல்லை, அவர் கந்தன்தோட்டத்தில் தான் இருந்து வந்தார். முத்துச்சாமி அந்த 5–1/4 ஏக்கர் பூமியில் தான் வசித்து வந்தார் என்றும், அங்கு வைத்து அவருடைய குழந்தைகள் பிறந்தது என்றால் சரியல்ல. வெல்ஸ்புரத்தில் பள்ளிக்கூடம் எதுவும் இருக்கிறதா? என்று எனக்கு தெரியாது. அந்த வெல்ஸ்புரத்தில் உள்ள பள்ளியில் தான் தவமணி படித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது பெரிய மச்சனன் முத்துச்சாமியை முத்தப்பன் என்றும் அழைப்பார்கள் என்றும், அவரை கொலை செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. முத்துச்சாமி இறந்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. முத்துச்சாமி இறக்கும் வரையில் 5–1/4 ஏக்கர் பூமியில் தான் வசித்து வந்தார் என்றால் இல்லை, கந்தன்தோட்டத்தில் தான் வசித்து வந்தார். அந்த கந்தன்தோட்டத்தில் முத்துச்சாமி விவசாயம் செய்து வந்தாரா? என்றால் இல்லை. முத்துச்சாமி 5–1/4 ஏக்கர் சொத்தில் தான் வசித்து வந்து அவர் கொலை செய்யப்பட்டார் என்றும், அவருடைய உடலை அந்த பூமியில் தான் அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முத்துச்சாமியை எங்கு அடக்கம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் இந்த வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.13 13:42:41 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**